திருப்பத்தூர், திருவாடானை, பரமக்குடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர்; மதுரையில் திண்டுக்கல், பழனி, திருமங்கலம்; திருச்சிராப்பள்ளியில் பெரம்பலூர், உடையார்பாளையம், கரூர், குளத்தூர், ஆலங்குடி; திருமயம்; திருநெல்வேலியில் சங்கரன்கோவில், கோவில்பட்டி, நாங்குனேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம்.

Buses held up by students at Boothapandi

*238 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any of the State Transport buses were held up by students at Boothapandi in Nagercoil on 5th July 1967 ; and

(*b*) if so, the steps taken by the Government to prevent such occurrences?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இதுபோன்ற நிகழ்ச்சி, பூதபாண்டியில் 4–7–67-ல் நிகழ்ந்தது ; 5–7–67-ல் அல்ல.

(இ) தேவை ஏற்படும்பொழுது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : சார், 6–7–67-க்குப் பின்னும் போக்குவரத்துத் துறையிலே பல இடங்களிலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு விட்டது—இந்தி எதிர்ப்பின் காரணமாக. கோவை மாவட்டத்திலே இரண்டு மாணவர்கள் உயிர் இழக்கும் நிலையும் ஏற்பட்டுவிட்டது; இவ்வித சட்டவிரோதமான செயல்களை தடுப்பதற்கு 'prevention is better than cure' என்ற முறையிலே ஏதாவது ஒரு கமிஷன் ஏற்படுத்துவதோ அல்லது வேறு நடவடிக்கைகளை எடுப்பதோ அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இவைகளுக்கெல்லாம் கமிஷன்கள் நியமிப்பதைவிட எல்லாக் கட்சிகளிலும் உள்ள பொறுப்புள்ள தலைவர்கள் இப்படிப்பட்ட செயல்களிலே யாரும் ஈடுபடவேண்டாமென்று அறிவுரை வழங்குவது சாலப் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, பூதபாண்டியில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் மாணவர்களால் மாத்திரம் நிறுத்தப்படவில்லை. மாணவர்கள் பெயரை வைத்துக்கொண்டு பல தீய சக்திகள் பின்னாலிருந்து இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவதாக அரசாங்கத்திற்கு தகவல் வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சர்க்கார் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எல்லாம் கொடர் நடவடிக்கைகள் அதிகமாக இல்லாத வகையிலே அமையவேண்டுமென்பது இந்த சர்க்காரினுடைய கொள்கை. ஆகையால் இது மாணவர்களாலே மட்டும் என்று கூட அல்ல; தீய சக்திகள் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் சர்க்காருக்குக் கிடைத்துள்ளன. அனால் அவைகளிலே உள்ள அரசியல் சூழ்நிலை, ஒரு அரசியல் கட்சி இன்னொரு அரசியல் கட்சியை தீய சக்தி என்று குறிப்பிட்டு—ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு அரசியல் கட்சி, இன்னொரு

அரசியல் கட்சி இவர்கள் பின்னால் நிற்கிறார்கள் என்று சொல்வதையெல்லாம் குறிப்பிட்டு—அதன்பேரில் நடவடிக்கைகள் எடுத்து, அதன் மூலம் நிலைமையை மோசமாக்கக்கூடாது என்பது இந்த சர்க்காரினுடைய கொள்கையாக இருந்து வருகிறது.

திரு. வ. ஜார்ஜ்: அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாணவர்களுக்கும் டிரான்ஸ்போர்ட் பஸ் தொழிலாளர்களுக்கும் அடிக்கடி கடந்த வருஷம் சண்டைகள் நேரிட்டன. அதற்குக் காரணம் பீக் ஹவர்ஸில் மாணவர்களுக்குப் போதுமான பஸ்கள் விடுவதில்லை. விடுகின்ற பஸ்களில்கூட ஒரு குறிப்பிட்ட அளவு பாஸஞ்சர்ஸ் மட்டும் ஏற்றிக்கொள்ளலாம் என்ற அளவில் ரூட் நடத்துகிறார்கள். எனவே அரசாங்கம் இந்த பீக் ஹவர்ஸில் கொஞ்சம் நியாயமான அளவு ஓவர் லோடுக்கு வழிவகை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் சொல்வது சரியான தகவலாக இருக்குமானால் அது கவனிக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருக்கிற ஊழியர்கள் மாணவர்களிடமும், மற்றவர்களிடமும் போதிய அளவு மரியாதையோடு நடந்து கொள்ளாத சூழ்நிலை பரவலாக இருப்பதைப் பார்க்கிறோம். அதற்காக பிற துறைகளிலே 'மரியாதை வாரம்' கொண்டாடுவதைப்போல இந்தத் துறையினரும் 'மரியாதை வாரம்' கொண்டாடவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்த மரியாதை நிரந்தரமாக இருக்கவேண்டுமென்பது இந்த அரசினுடைய கொள்கை. வாரத்தில் ஒருநாள் மரியாதையாக இருந்துவிட்டு மற்ற நாட்களிலே வேறு மாதிரியாக இருப்பது உகந்ததல்ல.

திரு. கே. விநாயகம்: பூதபாண்டியில் நடந்த நிகழ்ச்சிகளைப்போல மாநிலம் முழுவதும் ஆங்காங்கு போக்குவரத்து தடைபடுத்தப்பட்டது, சிலர் அப்படி செய்ய தூண்டிவிடக்கூடிய சூழ்நிலை இருந்ததால் என்று சொல்லப்படுகிறது. அப்படி தூண்டி விட்டவர்கள் தீய சக்திகளா, மாணவர் சக்திகளா என்பதைத்தவிர, போக்குவரத்தைத் தடுத்தவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று யோசித்து, அவர்களை தக்க முறையிலே தண்டிப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இந்த அரசாங்கம் வேண்டுமென்றே எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த அரசாங்கமே தூண்டிவிட்டதாக பலரால் சொல்லப்படுகிறதே, இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இவைகளையெல்லாம் இந்த அரசாங்கம் தூண்டிவிட்டது என்ற தவறான கருத்தை கனம் உறுப்பினர் அவர்கள் கொண்டிருப்பதை நீக்குவதற்கு அவர்களுக்கு ஒரு தகவல் தர விரும்புகிறேன். போக்குவரத்தைத் தடைப்படுத்துகிற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல, இந்தியா முழுவதுமே நடந்துகொண்டிருக்கின்றன. அது இப்பொழுது மட்டுமல்ல, பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கம் தூண்டிவிட்டு இவைகளைச் செய்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்தை வைத்திருப்பதை முதலில் அவர் நீக்கிக் கொள்ளவேண்டும். தூண்டிவிட்டதற்கு தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, சர்க்கார் எடுத்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் வேறுவிதமான தொடர் நடவடிக்கைகளைத் தூண்டிவிடத்தக்கதாக இருக்கக்கூடாது என்பதுதான் இந்த சர்க்காருடைய கொள்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் மசோதா

1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

3. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பினைகீழ் ரூ. 1,58,80,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

திரு. வி. கே. கோதண்டராமன்: விவசாயத்திற்குத் தேவையான பொருள்களின்மீதும் உணவுப் பொருள்களின்மீதும் விற்பனை வரி போடாமல் விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூற—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பினைகீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: விற்பனை வரி வசூலிப்பதில் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: ஐயா, ஏழைகள் உபயோகிக்கும் எல்லா உணவுப் பொருள்களையும், விற்பனை வரி விதிப்பிலிருந்து நீக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.